செ.வெ.எண்:28 நாள்:12.01.2018

# பொங்கல் சுற்றுலா விழா – பத்திரிக்கைசெய்தி

## உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள், பொதுமக்கள் பங்கேற்க மாவட்ட ஆட்சித்தலைவர் திருநெல்வேலி அவர்கள் அழைப்பு

திருநெல்வேலி மாவட்டத்தில் பொங்கல் விழா ஆண்டுதோறும் மாவட்ட நிர்வாகம் மற்றும் சுற்றுலாத்துறை சார்பில் மிக சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்வாண்டு திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டையில் உள்ள வ.உ.சி மைதானத்தில் வைத்து பொங்கல் சுற்றுலா விழா 14-ம் தேதி நடக்கிறது. இதில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள், பொதுமக்கள் பங்கேற்க மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அழைப்பு விடுத்துள்ளார்.

14-ந் தேதி நடைபெற்ற உள்ள பொங்கல் விழாவினை திருநெல்வேலி மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் துவக்கி வைக்க உள்ளார். இதில் அதிக அளவில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள், பொதுமக்கள் கலந்து கொள்ள உள்ளனர். விழா நடைபெறும் இடத்தில் பாரம்பரிய முறைப்படி அரசு அதிகாரிகள் மற்றும் உள்ளூர் மக்கள் வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளை வரவேற்கவும் அதன்பிறகு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுடன் இணைந்து பொங்கல் வைப்பதற்கும் பல்வேறு பாரம்பரிய விளையாட்டு போட்டிகள் மற்றும் கலைநிகழ்ச்சிகள் நடத்திடவும் தேவையான முன்னேற்பாடுகளை மாவட்ட ஆட்சியரின் அறிவுரைப்படியின்படி திட்ட அலுவலர், மாவட்ட மகளிர் திட்டம் மற்றும் மாவட்ட சுற்றுலா அலுவலர், திருநெல்வேலி அவர்கள் இணைந்து மேற்கொண்டு வருகிறார்கள்.

இதில் கலந்துகொள்ள விருப்பமுள்ள வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள் 0462-2500104 என்ற தொலைபேசி எண்ணிலும் 9176995877 சுற்றுலா அலுவலர் அவர்களின் அலைபேசி எண்ணிலும் தொடர்பு கொண்டு விவரங்களை தெரிந்து கொள்ளலாம். அலுவலகத்துக்கு வர இயலாதவர்கள் totirunelveli@gmail.com என்ற இ-மெயில் முகவரியில் தங்கள் வருகையை முன்பதிவு செய்யலாம். என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.